

# அருள்மிகு சொர்ணாம்பிகை உடனுறை அருள்மிகு அகத்தீஸ்வர சுவாமி திருக்கோயில்


வில்லிவாக்கம், சென்னை - 600 049.

தொலைபேசி : 26172326

வலைதளம் : villivakkamagatheeswarartemple.tnhrce.in


"சிவனொடுஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனொடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை
புவனம் கடந்து அன்று பொன் ஒளி மின்னும்
தவநச் ஜடைமுடித் தாமரை யானே"

- திருமூலர்

## புதிய திருத்தேர் வெள்ளோட்ட விழா அழைப்பிதழ்

சிவநேய செல்வங்களே!

tnhrce.org

நமது சென்னையம்பதியிலேயே வில்வாரண்யம் "அங்காரக க்ஷேத்திரமாகவும்" "செவ்வாய்க்கிழமை கோயில்" என்ற சிறப்புப் பெயர் பெற்றதும் நவக்கிரகங்களில் அங்காரகன் தனக்கு ஏற்பட்ட சாபம் நீங்க தீர்த்தம் உண்டாக்கி சிவனை வழிபட்ட ஸ்தலமாகும். **இவ்வாலயத்தில் அகத்தீஸ்வரரை வழிபட்டால் செவ்வாய் கிரகத்தால் ஏற்படக்கூடிய அனைத்து தோஷங்களும் நிவர்த்தியாகும் ஸ்தலமாகவும் விளங்குகிறது.**

இத்திருக்கோயிலில் பல ஆண்டுகளாக திருத்தேர் இல்லாத நிலையைப் போக்கி, சேவார்த்திகள் வேண்டுகோளுக்கு இணங்க 24 அடி உயரத்தில் ரூ. 19.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மரத்தேர் அழகுற செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**நிகழும் ஜய வருடம் தைமாதம் 12-ம் தேதி (26.01.2015) திங்கட்கிழமை சப்தமி திதி, ரேவதி நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 6.00 மணிக்குமேல் 7.00 மணிக்குள்ளாக கும்ப லக்னத்தில் சுபஹோரையில் புதிய திருத்தேர் வெள்ளோட்ட திருவிழா நடைபெற உள்ளது.**

மேற்படி புதிய திருத்தேர் வெள்ளோட்ட திருவிழாவில் சேவார்த்திகள் அனைவரும் கலந்து கொண்டு அருள்மிகு சொர்ணாம்பிகை உடனுறை அருள்மிகு அகத்தீஸ்வரர் அருளைப் பெற வேண்டுகிறோம்.

**ரு. தேன்மொழி**
செயல் அலுவலர்

மற்றும்

**பெ. சக்தி**
தக்கார்

**திருக்கோயில் பணியாளர்கள்**